RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2435

OPEN ACCESS

# ஐம்பெருங்காப்பியங்கள் காட்டும் பெண்ணியம்

இரா. கார்த்திகா [அ, *], ஜெ.தேவி [அ]

[அ] இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in Five Great Epics

R. Karthika [a, *], J. Devi [a]

[a] Department of Literature, Tamil University Thanjavur – 613010, Tamil Nadu, India

* Corresponding Author: kathikau@gmail.com

Received: 24-04-2024
Revised: 02-07-2024
Accepted: 09-07-2024
Published: 17-07-2024

**ABSTRACT**

Our ancient Tamil writers composed epics with the aim that human life should be regulated based on the four principles of virtue, materiality, pleasure and home. Considering this, it is worth bearing in mind that the later grammar book Thandiyalankaram has clearly defined the grammar for epics. Although epics don't portray the reality but it has been teaching our Tamil people about life for many generations. Those who follow it are living a moral life. It is not necessary to follow the words of the epics exactly in all situations. Before following it is always better to analyse all these questions Why? For what? Will it not harm any living being? Women fill themselves with love and family as the undiminished Akshaya vessel of the penitent daughter of Tamil Thailand. They are walking on the path of society. The purpose of this article is to examine the way in which Five Great Epics of Tamil have made assessments about such women's in society.

**Keywords:** Sangam Literature, Five Great Epics, Human Life

## முன்னுரை

அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள்கள் நான்கின் அடிப்படையில் மனித வாழ்வு நெறிப்பட அமைய வேண்டும் என்ற நோக்கில் நம் பண்டைய தமிழர்கள் காப்பியங்களை இயற்றினர். இதனைக் கருத்தில் கொண்டே பிற்காலத்தில் எழுந்த தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல் காப்பியங்களுக்கான இலக்கணத்தைத் தெளிவுற வரையறுத்துள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கது. காப்பியங்கள் உண்மை நிகழ்வு இல்லை என்றாலும், அவை பல தலைமுறைகளாக நம் தமிழருக்கு வாழ்வியலை கற்றுக் கொடுத்து வருகின்றது. அதனைப் பின்பற்றி வாழ்பவர்கள் நெறி பிறழாத வாழ்வினை வாழ்ந்தும் வருகின்றனர்.

காப்பியங்கள் கூறும் கருத்துகளை அப்படியே எல்லா சூழ்நிலையிலும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஏன்? எதற்கு? என்று கேள்வி எழுப்பி, அஃது எந்த உயிருக்கும் தீங்கு விளைவிக்காமல் இருக்குமா? என்று ஆராய்ந்து அறிந்து பின்பற்றுவதே நன்று. மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்கிறார் கவிமணி. தமிழ்த்தாயின் தவப்புதல்வியாய் அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரமாய் பெண்கள் தங்களை அன்பால் தம்மை நிறைத்துக் கொண்டு குடும்பம், சமூகம் என்னும் பாதையில் உலா வருகின்றனர். அத்தகைய பெண் சமூகம் பற்றி ஐம்பெருங்காப்பியங்கள் எந்த வகையில் மதிப்பீடுகளைத் தந்துள்ளன என்பதை ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையில் நோக்கமாகும்.

## சிலப்பதிகாரத்தில் பெண்ணியம்

உலக மொழிகளில் தோன்றிய காப்பியங்கள் அனைத்தும் புகழ்பெற்ற அரசையும் ஆண்டவனையும் புகழ்ந்து பாடிக் கொண்டிருக்கும் சூழலில், குடிமக்கள் காப்பியமாகத் தோன்றியது சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, சூளாமணி ஆகிய ஐம்பெருங்காப்பியங்கள் அனைத்தும் பெண்களை மையமிட்டுப் படைக்கப்பட்ட காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரத்தில் மாதரில் சிறந்தவளாகக் கண்ணகியை வடித்துக் காட்டியுள்ளார் காப்பிய ஆசிரியரான இளங்கோவடிகள்.

"போதிலார் திருவினாள் புகழுடை வடி வென்றும்

தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்

மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்

காதலாள் பெயர்மன்னும்கண்ணகி யென்பாள் மன்னோ!!" (சில.மங்.பா.26-30)

செந்தாமரை மலரில் உறையும் திருமகளின் புகழை உடைய வடிவை ஒத்தது இவளது வடிவம் என்றும், அருந்ததியின் கற்பு இவளது கற்புக்கு நிகரானது என்றும், புகார் நகரத்து மக்கள் வியந்து போற்றும் அரும்பெருங் குணங்களை விரும்பிடும் பண்பை உடையவள் ஆவாள் என்றும் கண்ணகியை இளங்கோவடிகள் அறிமுகப்படுத்துகிறார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது" (குறள்.45)

என்பார் திருவள்ளுவர். இல்வாழ்க்கையின் குறிக்கோள் இன்பம் என்று அவர் குறிப்பிடவே இல்லை. அன்பு, பண்பு இந்த இரண்டும் கண்ணகியின் பால் தலைத்தோங்கி நிற்கின்றன. பெண் என்பவள் வெறும் பொழுதுபோக்குச் சித்தரமாக இல்லாமல் போராடி வெற்றி பெறும் புகழுக்குரியவள் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. சிலப்பதிகாரம் முழுவதிலும் கண்ணகி என்பவளை முன்னிறுத்தி பெண்மையின் பெருமையை நிலை நிறுத்துவதைக் காண முடிகிறது. காப்பிய இறுதியில்

"அத்திறம் நிற்கநம் அகல் நாடு அடைந்தஇப்

பத்தினி கடவுளைப் பரசல் வேண்டுமென

மாலை வெண்குடை மன்னவன் விரும்பி" (காட்சிக்காதை.113-115)

கண்ணகியைப் பத்தினி கடவுள் என்று கூறியவள் சேரமா தேவிதான். மாதரார் தொழுது ஏத்தும் நிலையை இங்கு காண முடிகிறது. எனவே கண்ணகி கற்புடை தெய்வம் என்று அடிகள் கூறியது செயலுக்கு வந்து சேர்கிறது. சேர நாட்டில் அவளுக்குக் கோயில் அமைக்கப்படுகிறது. உலகிற்கு ஓங்கிய திருமாமணி ஆகிறாள். கற்பு என்பது ஒழுக்கம் மட்டுமல்ல சீற்றமும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவள் கண்ணகி என்பதை இக்காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது. காப்பியத்திற்கு மட்டுமல்லாமல் காப்பியம் தோன்றிய காலம் முதல் இக்காலம் வரை பெண்மையின் திறனை எடுத்து உரைப்பதற்கு உதாரணமாய் அமைந்தது சிலப்பதிகாரம் என்றால் மறுத்தற்கியலா உண்மையே ஆகும்.

## மணிமேகலை கூறும் பெண்ணியம்

கண்ணகி மட்டும் அல்லாமல் ஆடல் மகளாக அறிமுகப்படுத்தப்பட்ட மாதவி, கோவலனுக்காகவே வாழ்ந்து தன் மகளை துறவியாக்கிய மாதவியும் காப்பியத்தில் பெருமைப்படுத்தப்படுகிறாள். மணிமேகலை எனும் காப்பியத்தின் நாயகியான மணிமேகலை, தனது தாய் மாதவியின் குலத்தொழில் செய்யாது குடும்ப வாழ்க்கையைத் துறந்து நாட்டு

மக்களின் பசி தீர்த்தும், மக்களுக்கு அற மொழிகளை எடுத்து உரைத்தும், பல நல்ல அறங்களையும் செய்து பௌத்த நெறியின் படி முத்தி பெற்று அறச்செல்வியாகக் காணப்பட்டாள்.

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்

மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டதில்" (ஆபு.மணி.அடைந்த காதை.228-230)

இக்காப்பியத்தின் வாயிலாக உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்கிறார் சாத்தனார். எத்தன்மை கொண்டவராக இருந்தாலும் சரி, எத்தவறு புரிந்தவராக இருந்தாலும் சரி, அதனை மாற்றுதல் என்பதும் திருத்துதல் என்பதும் முடியும் என்ற கருத்தை நிலை நிறுத்த மணிமேகலை இங்கு முன்னிறுத்தப்பட்டு இருப்பதைக் காண முடிகிறது. ஒரு சமூக மாற்றத்திற்கு இப்பெண்ணே காரணமாகிறாள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பது மட்டுமல்லாமல் தேவைப்பட்டபோது பெருமையும், உரனும் கொண்ட பெண்மையை இக்காப்பியத்தின் வழிக் காண முடிகிறது.

## சீவக சிந்தாமணி கூறும் பெண்ணியம்

சீவகனைச் சுடுகாட்டில் பெற்றெடுக்கும் விசையை முதல் சீவகன் மணந்ததாகக் கூறப்படும் எட்டுப் பெண்கள் வரை இக்காப்பியம் முழுவதும் பெண்களே நிறைந்திருப்பதை உணரலாம். திருத்தக்க தேவர் சீவகனுக்கு மணமுடிக்கும் எட்டுப் பெண்களும் எட்டு விதமாகச் சீவகனுக்குத் துணை புரியும் பெண்களாக படைத்திருக்கிறார். அவர்களின் துணைகொண்டு தன் நாட்டை அடைகிறான் சீவகன்.

பெண்கள் இல்லை என்றால் உலகம் நிலைத்திராது. உலக இயக்கத்திற்குப் பெண் இன்றியமையாதவளாக இருக்கிறாள். சிவன் இல்லையேல் சக்தி இல்லை என்பதற்கு இணங்க 10 பெண்களைக் காப்பியத்தில் படைத்துள்ளார் திருத்தக்கதேவர். மேலும், ஓடும் நதி முதல் வணங்கும் தெய்வம் வரை பெண்கள் பெயரை முதன்மைப்படுத்தப்படுவதை போல சீவகன் கல்வி கற்றதை ஞானம் என்னும் குமரியை அடைய நாமகளைப் புணர்ந்ததாகக் கூறுகிறார். சீவகன் பகைவரை வென்று நாட்டை மீட்ட செயலைக் குறிப்பிடும்போது மண்மகளை மணந்தான் என்றும், முடிசூடிய நிகழ்ச்சியைக் கூறுகையில் பூமகளை மணந்தான் என்றும், முக்தி நிலையை அடைந்ததைப் பற்றி எடுத்துரைக்கையில் கேவல மடந்தையை மணந்தான் என்றும் கூறுவதன் மூலம், கல்வி, நாடு, முக்தி என அனைத்தும் பெண்மையின் அம்சமாகவே இக்காப்பியத்தில் எடுத்துரைப்பதை அறிய முடிகிறது.

## குண்டலகேசி கூறும் பெண்ணியம்

குண்டலகேசி என்னும் காப்பியமானது முழுவதுமாகச் கிடைக்கப் பெறாத காப்பியம். ஆனாலும் நீலகேசி என்னும் காப்பியத்தின் வழியாக இக்கதைக் கூறுகளை அறிய முடிகிறது. குண்டலகேசி காப்பியத்தின் முக்கியப் பாத்திரமாக விளங்குவது, புகார் நகரில் ஒரு வணிக குடும்பத்தில் பிறந்த பத்திரை என்பவள் ஆவாள். ஒருநாள் திருடனைக் கண்டு அவன் மீது காதல் கொள்கிறாள். பின்பு அவனையே திருமணம் செய்து கொள்கிறாள். வாழ்க்கைப் பாதையின் ஓட்டத்தில், ஒருநாள் தன் கணவனை நீ திருடன் தானே! என்று கூறிவிட்டாள். அதனால் கோபம் கொண்ட கணவன் காளன், அவளைக் கொல்ல முயற்சிச் செய்கிறான். அவளை மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்று கொலை செய்ய முயல்கிறான். அவனின் சூழ்ச்சி அறிந்த குண்டலகேசி, அவனை மலையில் இருந்து தள்ளிக் கொன்று விடுகிறாள்.

பின்பு தவறு உணர்ந்து மனம் நொந்த அவள், பௌத்த துறவியிடம் உபதேசம் பெற்று புத்தச் சமயப் பெருமைகளை நிலைநாட்டினாள். இக்காப்பியத்தின் மூலம் அந்நாட்களில் பெண்ணியம் மிகவும் வலுவாகவும் தைரியமாகவும் இருந்து இருக்கிறது என்பது பெண்மையை முன்னிலைப்படுத்திய நாதகுத்தனார் படைத்தளித்த இக்காப்பியத்தின் மூலம் புலனாகின்றது.

## முடிவுரை

ஐம்பெருங்காப்பியங்கள் அனைத்தும் ஆண், பெண் இருபாலரில் பெண்ணுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் சிறப்பித்து இருப்பதை அறிய முடிகிறது. இவ்வாறு பெண்களை மையப்படுத்தும் படைப்புகளே காலந்தோறும் வரவேற்புக்கு உரியதாக இருந்திருக்கிறது. இதை இன்றளவும் பல்வேறு படைப்புகளின் வழி அறியலாம். ஐம்பெருங்காப்பியங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு கோணங்களில் பல்வேறு திறன்களைப் பதிவு செய்தாலும், இவற்றில் ஆழ்ந்து நோக்கத் தகுந்தது யாதெனில், பெண்மையைச் சிறப்பிக்க செய்த இக்காப்பியங்கள் அனைத்தும் எதிர்பாலரால் படைக்கப்பட்டது என்பதுதான். பெண்களை முன்னிலைப்படுத்துவதால் மட்டுமே இக்காப்பியங்கள் இன்றளவும் பெருமையாகப் பேசப்படுகின்றன. பெண்மை என்பதற்குள்ளாகவே அனைத்து நிகழ்வுகளும் அடங்கி விடுவதனையும் உணர்த்த, காப்பிய ஆசிரியர்கள் தாய் வழிச் சமுதாயமாக மலர்ந்து நிற்கும் இச்சமுதாயத்தை எடுத்துக்காட்டுவதற்காகத் தங்கள் படைப்புகளிலும் அவர்களை முன்னிறுத்தி, அதன் மூலம் படைப்பாசிரியர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பது புலனாகிறது.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License